அப்போது பரிசல்காரர் திடீரென்று பரிசலை வேகமாக விலக்கினார். அங்கே நீர்ச்சுழல் இருந்தது.



சிறிது தூரம் சென்றோம். எதிரே ஒரு பரிசல் வந்தது. அதில் வந்தவர்கள் கவச உடை அணிந்திருந்தார்கள். படகைச் சுற்றி ரப்பர் குழாய் இருந்தது. அதைக் கண்டவுடன் ‘நாமும் பாதுகாப்பிற்கு இவற்றைக் கொண்டு வரவில்லையே’ என்று பயந்தோம்.



பின் பரிசல் மரப்பாலத்தின் கீழே சென்று கொண்டிருக்கும்போது, "டமால்" என்ற சத்தம் கேட்டது. தண்ணீர் சிதறி எங்கள் மேல் தெறித்தது.

திரும்பிப் பார்த்தபோது பாலத்தின் மேலிருந்து சிறுவர்கள் ஒவ்வொருவராக ஆற்றில் குதித்துக் கொண்டிருந்தனர். அப்போது எங்களுக்கும் குதிக்க வேண்டும் போல் இருந்தது.

கரை ஓரமாகச் செல்லும்போது, வளர்ந்திருந்த தென்னை மரத்திலிருந்து குலை குலையாய்த்  தேங்காய் தொங்குவதும் அதன் ஓலைகள் நீரை உரசிக் கொண்டிருப்பதும் கரை ஓரப் பசுமையும் காண்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது.





கரையை நெருங்கும்போது நீரில் நாய் வேகமாக நீந்தி வந்தது.



அதைப் பார்த்த நண்டு தன் வளையை நோக்கி வேகமாக ஒடியது.



தவளை கரையில் இருந்து ஆற்றில் தாவிக் குதித்தது.



மீனைக் கொத்திய கொக்குக் கூட்டம் வானில் பறந்தது. இவையாவும் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன.

இந்தப் பரிசல் பயணம் எனக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. அடுத்த விடுமுறைக்கு நீயும் இங்கு வா! நாம் எல்லோரும் ஆற்றில் பயணிப்போம்!

பாசத்துடன்,
மாலினி.

## கவனத்தில் கொள்வோமா !

பரிசலில் பயணம் செய்யும் போது  நிற்கக் கூடாது.





பரிசலில் குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் பயணம் செய்ய வேண்டும்.

பரிசலில் பயணம் செய்யும்போது கட்டாயம் பாதுகாப்பு உடை அணிய வேண்டும்.





நீர்ச்சுழல் உள்ள இடங்களில் குளிக்கக் கூடாது.

புதைமணல் உள்ள இடங்களுக்கு அருகில் செல்லக்கூடாது.




நீர்ப்பகுதியில் பயணம் செய்யும் போது ஆபத்து ஏற்படுமாயின், அதிலிருந்து தப்பிக்க உதவும் பொருள்களை மட்டும் வட்டமிடுக.

| | | |
|---|---|---|
| தலைக்கவசம் | மூங்கில் | மரக்கட்டை |
| பாதுகாப்பு உடை | இரப்பர் வளையம் | |

## பயணங்கள் பலவகைப்படும் :




மாட்டுவண்டிப் பயணம், பரிசல் பயணம், பேருந்து பயணம், இரயில் பயணம், கப்பல் பயணம், விமானப் பயணம் என பயணங்கள் பல வகைப்படும்.
இதில்...



சாலையில் செல்லும் பயணம் ____________



நீரில் செல்லும் பயணம் ____________

ஆகாயத்தில் செல்லும் பயணம் ____________





### உங்களுக்குத் தெரியுமா ?

மலைப் பகுதிகளில் பயணம் செய்யும்போது
என்னென்ன காட்சிகளைப் பார்ப்பீர்கள் ?

